விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 002 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 05 வியாழக்கிழமை (21.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## தேர்தலை இலக்காக கொண்டு அரிசி இறக்குமதி

### ஹர்ஷ டி சில்வா



(கொழும்பு)

தேர்தலை இலக்காகக் கொண்டே அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்கிறதென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்

11

## நாட்டின் நெருக்கடிகளுக்கு ரணில் தீர்வு கண்டுள்ளார்

### மகிந்த புகழாரம்

(கொழும்பு)


நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிகளுக்கு தீர்வுகண்டு வெற்றிகரமாக சட்டவாட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமுல்படுத்தியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சட்டத்தை வெற்றிகரமாக மீட்டெடுத்துள்ளார். அடுத்த தேசிய தேர்தல் வரை

11



# தமிழ் எம்.பிக்களுடன் ஜனாதிபதி இன்று சந்திப்பு



- நீண்டகால அரசியல் பிரச்சினை தொடர்பில் பேசப்படும்.
- பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதான தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் கலந்துரையாடல்.
- வாக்குறுதிகள் நிறைவேற்றப் படாததால் சந்திப்பில் பங்கேற்க மாட்டேன் என விக்னேஸ்வரன் தெரிவிப்பு.

(12ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ள அனர்த்தம்

## சுமார் 5 ஆயிரம் பேர் யாழில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாக பெய்துவந்த அடைமழை காரணமாக யாழ்ப்பாணத்தில் இதுவரை 1514 குடும்பங்களைச் சேர்ந்த 5160 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

11

### உலக வங்கியிடமிருந்து

## இலங்கைக்கு மேலும் 250 மில்லியன் கடன்

(கொழும்பு)

இலங்கைக்கான தமது நிதியுதவியின் இரண்டாவது தவணையாக உலக வங்கி மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை விடுவித்துள்ளது.

அரசாங்கத்தின் பாதீட்டுக்கு ஆதரவாக 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதற்கு கடந்த ஜூன் மாதம் உலக வங்கி அனுமதி வழங்கியிருந்தது.

11

## சொத்துக்களை ஏலம் விடும் சட்டம் கைவிடப்பட வேண்டும்

### அரசிடம் சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

வங்கிக் கடன் பெற்று மீளச் செலுத்தாதவர்களது சொத்துக்களை ஏலம் விடும் பரேட் சட்டத்தை தற்காலிகமாக கைவிட அரசாங்கம் உடனடியாக நட

11

## நாவற்குழியில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு ஒரு

11

## போதை மாத்திரைகளுடன் யாழில் 15 பேர் கைது

### நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொக்குவில், நந்தாவில் மற்றும் யாழ். தனியார் பேருந்து நிலையப் பகுதி மற்றும் பாடசாலைக்கு அருகில் என கடந்த இரண்டு நாட்களில்

11



DLB
அபிவிருத்தி லொத்தர்
கப்ருக KAPRUKA
இன்றைய சுப்பர் பரிசுப்பொதி
ரூ.48 கோடிக்கும்
அதிகமாகும்
(Rs.480,005,294.20)
(C-2195)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடை, பல்பொருள் வாணிபக்கடைகள் (நாவாந்துறை), சந்தைகள், சிற்றுண்டிச்சாலை, வாகனப்பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

## மீள் கேள்வி, கேள்வி அறிவித்தல் - 2024
## 01.01.2024 - 31.12.2024

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் 01.01.2024 ம் திகதி முதல் 31.12.2024 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்வி, கேள்வி யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,150.00** (வற் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 21.12.2023 - 28.12.2023 (மு.ப **9.00** - பி.ப.**3.00** மணி வரை)

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 29.12.2023 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 29.12.2023 .மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **29.12.2023** ம் திகதி மு.ப **10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கள் பல்பொருள் வாணிபம், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை, சந்தைகள் மீள் கேள்விகோரல் - 2024

| இல | விபரம் | கடை இல | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை(வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 56,100.00 |
| 2 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,686,000.00 |
| 3 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 657,089.45 |
| 4 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,875,000.00 |
| 5 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 595,000.00 |
| 6 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 275,100.00 |
| 7 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.00 |
| 8 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,000.00 |
| 9 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,000.00 |
| 10 | நாவாந்துறை கடை (பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 218,910.61 |
| 11 | நாவாந்துறை கடை (பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 153,921.53 |
| 12 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 136,921.75 |
| 13 | நாவாந்துறை கடை (பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 152,074.47 |
| 14 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 2,250,000.00 |
| 15 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர்களது அறிமுகச்சந்தை | | 2,000.00 | 6,910.06 |
| 16 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 317,000.00 |
| 17 | பெரிய கடை மரக்கறிச்சந்தை வாழைப்பழக்கடை வடகிழக்கு மூலையாகவும், சந்தையின் வைரவர் கோவிலில் வடமேற்கு மூலையாகவும் உள்ள துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | | 5,000.00 | 250,000.00 |
| 18 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல்விளம்பர ஒலிபரப்பு சேவை | | 10,000.00 | 500,000.00 |

நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல 03 கேள்வி அறிவித்தல்

| இல | விபரம் | கடை இல | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 323,500.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்**
**யாழ்.மாநகர சபை**

### மண்டைதீவு மகாவித்தியாலய
# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(மண்டைதீவு)

மண்டைதீவு மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று (21) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி ரி.தயாபரன் தலைமையில் இடம் பெறும்.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன் பிரதம விருந்தினராகவும் சிவஸ்ரீ. ஜெகநாத பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ. நாகேந்திர சர்மா பிரபாகரக் குருக்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் பாடசாலை நிறுவுநர் சிவஸ்ரீ. சி.அகிலேஸ்வர சர்மா அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்படுவதுடன் ஸ்தாபகர் நினைவுக் கல்லும் திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

இதற்கான அனுசரணையை மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# உயர்தர பரீட்சைக்கான ஏற்பாடுகள் தயார்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையை எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடையும் தருவாயில் உள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள 2,298 பரீட்சை நிலையங்களில் ஜனவரி 31ஆம் திகதி வரை உயர்தர பரீட்சை இடம்பெறவுள்ளது.

பரீட்சைக் கால அட்டவணைகள் மற்றும் அனுமதி அட்டைகள் என்பன பாடசாலை அதிபர்களுக்கும் தனியார் விண்ணப்பதாரர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk எனும் இணையத்தளத்தின் மூலம் தங்களின் உரிய ஆவணங்களைப் பதிவிறக்கம்செய்துகொள்ள முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

# பொது மக்களை மிரட்டி பணம் வசூலிப்பு
## பெண் உட்பட 11 பேர் கைது

(கொழும்பு)

நாரஹேன்பிட்டியிலுள்ள மோட்டார் திணைக்களத்திற்கு அருகில் மக்களிடம் பலவித அழுத்தங்களை பிரயோகித்து பணம் வசூலித்த பெண்ணொருவர் உட்பட 11 பேர் பொரளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் பெரும்பாலானோர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும், அவர்கள் போதை பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பணம் தேடும் நோக்கில் குறித்த இடத்தில் தங்கியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நாரஹேன்பிட்டி நகரத்திற்கு அருகில் வசிப்பவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்...
கனடா, பிரான்ஸ், போலாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கு முற்பணம் எதுவுமில்லாமல் விரைவாக வீசாக்களை பெற்றுக் கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
Note - வங்கி வைப்புகள் மட்டும் காட்டினால் போதும்.
Hybrid International hub (pvt) ltd.
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
யாழ்ப்பாணம்
077 815 5920, 076 250 0098, 021 222 1265
(C-7957)

மலிவு விற்பனை
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER · Ria · MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7955)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் J/403 பருத்தித்துறை கிழக்கு கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. **ரூ.அபராஜிதன்** அவர்களுடைய அன்புத்தந்தையார்.

அமரர்
**கலாபூசணம் மாணிக்கம் ரூபமூர்த்தி**



அவர்கள் 19.12.2023 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் : 05.09.1949
மறைவு : 19.12.2023

பிரிவுத்துயருடன்...
பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.
(C-7956)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதியில்லை

## இலங்கை அதிரடி

(கொழும்பு)

**இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ள ஒரு வருட காலத்துக்கு எந்தவொரு நாட்டின் கப்பலுக்கும் அனுமதி வழங்காதிருக்க இலங்கை தீர்மானித்துள்ளது.**



அந்தவகையில் இலங்கை கடற்பரப்புக்குள் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் கப்பல்கள் பிரவேசிக்க முடியாது.

அதேவேளை சேவைகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொள்ள இலங்கை துறைமுகங்களுக்கு வருகை தரமுடியும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பின் விசேட பொருளாதார வலயத்தை ஆராய்வதற்கு மற்றுமொரு விசேட ஆய்வுக் கப்பலை ஈடுபடுத்த சீனா இலங்கையிடம் அனுமதி கோரியுள்ள பின்புலத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இம்முறை ஆய்வுகளுக்கு சீனாவின் ஷியாங் யாங் ஹொங் 3 எனும் கப்பல் பயன்படுத்தப்பட விருந்தது.

இந்த ஆய்வு அடுத்த ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி முதல் பெப்ரவரி 20ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என சீன தூதரகம் எழுத்து மூலமாக அறிவித்திருந்த நிலையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தற்போது எடுத்திருக்கும் தீர்மானம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி-5-6)

### 24 மணித்தியாலங்களில் 2,296 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் போதைப்பொருள் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 2,296 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 109 பேரிடம் தடுப்பு காவல் உத்தரவின் கீழ் விசாரணைகள் நடத்தப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் 14 சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றவியல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் 184 பேரை புனர்வாழ்வுக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## 1500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

கடந்த ஆண்டு முதல் இதுவரையில் சுமார் 1500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமல் விஜேசிங்க இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் வெளிநாடு செல்வதற்கு தேவையான அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த சுமார் 5000 மருத்துவர்கள் நாட்டில் உள்ளனர் .

நாட்டில் சிறிய மருத்துவமனைகள் 40இற்கும் மேற்பட்டவை மூடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## 98 ஆயிரம் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இதுவரை பதிவு- பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

2023ஆம் ஆண்டில் இணைய வழி ஊடாக இடம்பெற்ற 98,000 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் குறித்த தகவல்கள் பதிவாகியுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டில், இணையவழி ஊடாக இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பங்கள் தொடர்பில் 1லட்சத்து 46 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும் சம்பவங்கள் அடிக்கடி பதிவாகி வருகின்றன.

இதனை தடுப்பதற்காக பராமரிக்கப்படும் சர்வதேச தரவு அமைப்புடன் இணைந்து பணியாற்றுவதற்கு பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. (நி-5-6)

## மேல்நீதிமன்ற நீதிபதிகள் சங்கத் தலைவராக இளஞ்செழியன்



(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத் தலைவராக நீதிபதி இளஞ்செழியன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தின்போதே நீதிபதி இளஞ்செழியன் சங்க தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 2022ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்க தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

தற்சமயம் இரண்டாவது தடவையாக 2024 ஆம் ஆண்டுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். இப்பதவியை வகிக்கும் முதலாவது தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (5-6)

## அனுமதி அட்டைகள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சையை எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடையும் தருவாயில் உள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள 2,298 பரீட்சை நிலையங்களில் ஜனவரி 31ஆம் திகதி வரை உயர்தர பரீட்சை இடம்பெறவுள்ளது.

பரீட்சைக் கால அட்டவணைகள் மற்றும் அனுமதி அட்டைகள் என்பன பாடசாலை அதிபர்களுக்கும் தனியார் விண்ணப்பதாரர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk எனும் இணையத்தளத்தின் மூலம் தங்களின் உரிய ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## உயர்தர மாணவர்களுக்கான தனியார் வகுப்புகளுக்கு தடை

### பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு



(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான உயர் தரப் பரீட்சை தொடர்பான தனியார் வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நடத்துவது டிசெம்பர் 29 நள்ளிரவு முதல் நிறுத்தப்பட வேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, தடையை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையை 2024 ஆம்ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (நி-5-6)

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்றைய தினம் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 73.44 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.


அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 79.23 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.56 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ஐ.பி.எல் ஏலத்தில் அதிக விலைக்கு எடுக்கப்பட்ட வீரர்கள்










2024 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் போட்டிகளின் அவுஸ்திரேலி யாவின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் ஐ.பி. எல் வரலாற்றிலேயே மிகப் பெரிய தொகைக்கு ஏலத்தில் வாங்கப்பட் டுள்ளார்.

உலகின் நம்பர் 1 இருபது-20 தொடரான ஐ.பி.எல் 2024 ஆம் ஆண்டுக்கான வீரர் கள் ஏலம் துபாயில் நேற்று இடம் பெற்றது.

ஐ.பி.எல் வரலாற்றிலேயே மிக அதிக தொகைக்கு வாங்கப்பட்ட வீரராக அவுஸ்திரேலிய அணியின் மிட்செல் ஸ்டார்க்கை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சுமார் 24 கோடியே 75 லட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் வாங்கியுள்ளது. அவன ர

தொடர்ந்து மற்றொரு அவுஸ் திரேலிய வீரரான பேட் கம்மின்ஸ் 20 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி யால் வாங்கப்பட்டுள்ளார்.

3 ஆவது இடத்தில் நியூசிலாந்து வீரர் பேரல் மிச்சல் சுமார் 14 கோடி ரூபாய்க்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணியால் வாங்கப்பட்டுள்ளார்.

4 ஆவதாக பஞ்சாப் அணி ஹர்ஷல் பட்டேலை 11 கோடியே 75 லட்சத்திற்கும், 5 ஆவதாக அல்சாரி ஜோசப்பை 11 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு பெங்களூர் அணியும் வாங்கி யுள்ளது.

இதில் 10 அணி களை சேர்ந்த நிர்வாக பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு தங்கள் அணிக்கு தேவையான வீரர்களை ஏல த்தில் எடுத்தனர்.

ஒவ்வொரு அணியில் அதிகபட்சமாக 25 வீரர்களை எடுக்க வேண்டும். அவற்றில் 8 வீரர்கள் அதிகபட்சமாக வெளிநாட்டு வீரர்களாக இருக்க வேண்டும்.

இந்த மினி ஏலத்தில் கொல்கத்தா அணி அதிகபட்சமாக 31 கோடியே 35 லட்சம் ரூபாயை செலவழித்துள்ளது.

இதையடுத்து வரிசையாக சன்ரைசர்ஸ் அணி 30 கோடியே 80 லட்சம், சென்னை 30 கோடியே 40 லட்சம், குஜராத் 30 கோடியே 30 லட்சம், மும்பை 16 கோடி 70 லட்சம் ரூபாய், டெல்லி 19 கோடியே 5 லட்சம் ரூபாய், லக்னோ 12 கோடியே 20 லட்சம் ரூபாய், பஞ்சாப் 24 கோடியே 95 லட்சம் ரூபாய், பெங்களூர் 20 கோடியே 40 லட்சம் ரூபாய், ராஜஸ்தான் 14 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறது.

(ரி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த 6 நபர்கள் கைது

## பாவனையில் ஈடுபட்ட மாணவர்களை எச்சரித்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ். புறநகர்ப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில், மாணவர்களுக்கு போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்களிடம் அவற்றை வாங்கி வந்த 15 மாணவர்களை இனங்கண்டு கொண்டதையடுத்து குறித்த மாணவர்களை பொலிஸார் கடுமையாக எச்சரிக்கை செய்து, போதைப்பொருளுக்கு எதிரான விழிப் புணர்வை அவர்களுக்கு ஊட்டி பெற்றோர்களிடம் கையளித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 6 இளைஞர்களையும் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-5-6-33)

# போதனாவில் மீண்டும் "பாஸ்" நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் மீண்டும் பார்வையாளர் அனுமதிப் பத்திரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

போதனா மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அதிகரித்த பார்வையாளர்கள் காரணமாக போக்குவரத்து நெரிசல்கள், திருட்டுச் சம்பவங்கள், நோய்த் தொற்றுக்கள், நோயாளர் பராமரிப்பில் இடையூறுகள் என்பன ஏற்படுவதன் காரணமாக நேற்று முன்தினம் தொடக்கம் பார்வையாளர் அனுமதிப்பத்திரம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (நி-5-6-33)



வலம்புரி நாளிதழே வளமுடன் வாழியவே!

எமது அபிமானப் பத்திரிகையான வலம்புரி நாளிதழ் பத்திரிகைக்கு நேற்று 25 ஆவது பிறந்தநாள். மிடுக்குடன் மிளிரும் வாலிபனாய் வளர்ந்து சுபீட்சத்துடன் மங்களகரமாய் மாண்புடன் திகழ்ந்து அளப்பரிய அருஞ் சேவையாற்றி வரும் "வலம்புரி" நாளிதழே வளமுடன் வாழியவே என்று! உளமார வாழ்த்துகின்றோம்.

எல்லாத் துறைகளிலும் ஏற்றமுடன் திகழ்ந்து காலத்தின் தேவையறிந்து அனைத்து வாசகர்களும் ஆனந்தமாய் வாழ வழி வகுத்து நிற்கும் வலம்புரியின் சிறப்புச் சொல்லில் அடங்காது. அவ்வப்போது அழகாக வெளிவந்து வாசிக்க சுலபமாக அச்சேறும் ஒரே பத்திரிகை இது. சுருக்கமாகவும் அதேவேளை தெளிவாகவும் செய்தியை வெளியிட்டு பிரசுரத்தில் முதலிடம் வகிக்கும் வலம்புரிக்கு நிகர் வலம்புரியே! வாசிக்க வாசிக்க யோசிக்க வைக்கும் ஆசிரிய தலையங்கத்தின் கருத்தாழம் சுவை மதிப்பு மிக்கது.

இன்று போல் என்றும் இனிதாய் வளர்ந்து மக்கள் இதயங்களில் மலர்ந்து நின்று தொடர்ந்தும் மாண்புடன் 'வெளிவர வேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வெள்ளி விழாக் காண உள்ள வலம்புரி சீரோடும் சிறப்போடும் பேரோடும் புகழோடும் இருக்க வண்ணை வேங்கடேசன் திருவடி மலர் தாள் பணிந்து இறைஞ்சுகின்றோம்.

**வலம்புரியே நீ வளமோடு வாழ்க! வாழ்க!!**

**இராசையா ஸ்ரீதரன்,**
**கலாபூஷணம் சைவப்புலவர்**
**சிவநெறிக் கலாநிதி**
**தெய்வத் தமிழ்ச் சுடர்.**

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி துன்னாலை கிழக்குப் பகுதியில் பெண்ணொருவர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

51 வயதான குறித்த பெண் தனது ஆடைக்குள் ஹெரோயினை மறைத்து வைத்திருந்த நிலையில் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஆறு கிராம் அளவுள்ள ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-5-6-33)

# வீதியில் நடந்து சென்ற குடும்பஸ்தர் மீது தாக்குதல்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு குமுழமுனை கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வேளை வீதியால் நடந்து சென்ற நபர் மீதுஅதே கிராமத்தினை சேர்ந்த இளைஞன் ஒருவர் காரில் கம்பிகளுடன் வந்து தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்து சென்றுள்ளார்.

குமுழமுனை கிராமத்தினை சேர்ந்த 36 வயதுடைய குடும்பஸ்தர் வலது கை, வலது காலில் உடைவு ஏற்பட்ட நிலையில் மாஞ்சோலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நேற்று மேல திகசிகிச்சைக்காக யாழ். மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (நி-5-6)

# நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

மறைந்த நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் சிவநேசன் அமரத்துவமடைந்த நான்காவது ஆண்டு நினைவு வைபவமும் நினைவுப் பேருரையும் இன்று வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் நூலக கேட்போர் கூடத்தில் பதில் நூலகர் கலாநிதி. திருமதி. க.சந்திரசேகர் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6-33)

# இராசிபலன்

21.12.2023
மார்கழி 05, வியாழக்கிழமை
நவமி முற்பகல் 11.58 மணிவரை

ரேவதி பின்னிரவு 12.25 மணிவரை
சுபநேரம்-7.54-9.24 மணிவரை
இராகுகாலம்-1.54-3.24 மணிவரை

சந்திராஷ்டமம்
மகம், பூரம்.

வளவன்




தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுபசெய்திகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.




புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், திடீக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.




தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும்.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாடு சிறப்பினைத் தரும், போசன சுகமுண்டு.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




நடப்பதெல்லாம் நன்மைகேயென நினைக்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களை பாதியில் விட்டுவிடுவீர்கள், சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, உற்சாகமான நாள்.




அரசு வழியில் அனுகூலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், தொட்ட காரியங்கள் கைகூடும்.




விரும்பிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.




பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர்.




நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.


**தன்னைப் பணிவாரை தான் பணியும் காலமும் வரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 160 | 220 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1100 | 1200 |
| தக்காளி | 650 | 650 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 150 | 140 | 150 |
| கோவா | 450 | 400 | 400 | 500 |
| கரட் | 450 | 540 | 550 | 700 |
| பூசணி | 200 | 180 | 160 | 200 |
| புடோல் | 300 | 400 | 200 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 450 | 500 |
| பாகற்காய் | 600 | 800 | 600 | 800 |
| வெண்டைக்காய் | 300 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 500 | 350 | 400 | 400 |
| லீக்ஸ் | 300 | 400 | 400 | 450 |
| பீற்றூட் | — | 600 | — | 700 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | — | — | 1600 | — |
| போஞ்சி | 350 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 350 | 450 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 150 | 200 |
| தேசிக்காய் | 600 | 600 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | 250 | — | 400 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 200 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 180 | 100 | 200 |

# சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு



(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத் தினால் உயிரிழந்தோரின் எண் ணிக்கை 127 ஆக அதிகரித்து ள்ளது.இந்த நிலநடுக்கத்தில் 700 க்கும் அதிகமானோர் காய மடைந்துள்ளதாக சர் வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

இந்த நிலநடுக்கத்தில் சிக்கியுள்ளோரை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு ள்ளதாக சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளார். இந்த நில நடுக்கத்தில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான கட்ட டங்கள் சேதமடைந்து ள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனால் வீதிகளில் தஞ்ச மடைந்த மக்களை முகாம்க ளில் தங்க வைக்க சீன அரசா ங்கத்தால் உட னடி நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தீவிர மாக முன்னெடுக்கப்பட்டு வரும் மீட்பு பணிகளை அடிப்படை யாக கொண்டு உயிரிழந் தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடு மென அச்சம் வெளியிட ப்பட்டுள்ளது.

இதேவேளை, 2014 ஆம் ஆண்டின் பின்னர் சீனாவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கமாக இது கருதப்படுமெனவும் தெரி விக்கப்பட்டுள்ளமை குறி ப்பிடத்தக்கது. (றி-5-6)

சேவைநலன் பாராட்டு

திரு.கதிரவேலு ரவி
(சுகாதார தொழிலாளர் I)

சேவை விபரம்
நல்லூர் பிரதேச சபை -
சுகாதார தொழிலாளர் III - 15.07.1996-21.03.2007
சுகாதார தொழிலாளர் II- 22.03.2007-18.08.2016
சுகாதார தொழிலாளர் I- 19.08.2016-21.12.2023




எமது அலுவலகத்தில் கடந்த 27 வருடங்கள் சேவையாற்றி 21.12.2023 இல் ஓய்வு பெறும் திரு. கதிரவேலு ரவி அவர்கள் சகல நலன்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம். (பி-7958)

ஊழியர் நலன்புரிச் சங்கம், நல்லூர் பிரதேச சபை.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2996

**மனிழ்னன்**




**இஷானியா**




**விகடகவி**




**டிஷான்**




**சஷ்மியா**




**கஷ்மிதன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளக்காடான விவசாய நிலங்கள்

# 957 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

## புதுக்குடியிருப்பு கிழக்கு கமக்கார அமைப்பு

(முல்லைத்தீவு)

**விவசாய நிலங்கள் வெள்ளக்காடானதால் 957 ஏக்கர் நெற்செய்கையானது சேதம் அடைந்துள்ளதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதாக புதுக்குடியிருப்பு கிழக்கு கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.**




தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழையினால் முத்தயன்கட்டு குளத்தின் நீர் வரத்து அதிகரித்து குளத்தின் நான்கு வான் கதவுகளும் கடந்து 16 ஆம் திகதி திறக்கப்பட்டது. இதனால் விவசாய நிலங்களுக்குள் உள்நுழைந்த வெள்ளப்பெருக்கால் நெற்பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.

ஏற்கனவே நாட்டில் தற்போது ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு காரணமாக விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ள நிலையில் தற்போது ஏற்பட்ட இயற்கை அனர்த்தமும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முற்றாக பாதிப்படைய வைத்துள்ளது.

அழிவடைந்த விவசாய நிலங்களில் உள்ள நெற்பயிர்களின் அழிவினை மதிப்பீடு செய்து விவசாயிகளுக்குரிய நட்ட ஈட்டினை வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறித்த அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-5-6)

# போதை வில்லைகளுடன் மன்னாரில் இருவர் கைது



(மன்னார்)

இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட சட்டவிரோத போதை வில்லைகளுடன் இருவர் நேற்று காலை மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த இருவரிடமிருந்து 18 ஆயிரம் சட்டவிரோத போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தோட்டவெளி மற்றும் தாழ்வுபாடு பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

இதன்போது கைப்பற்றப்பட்ட போதை வில்லைகளின் பெறுமதி 21 லட்சம் ரூபாய் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களும் போதை வில்லைகளும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (நி-5-6-288)

# 4 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் வவுனிக்குளத்தில் அழிவு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் பாலி ஆறு பெருக்கெடுத்ததன் காரணமாக வவுனிக்குளத்தின் கீழான ஆயிரம் ஏக்கருக்கு மேலான நெற்பயிர்ச்செய்கையும் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மேட்டுப் பயிர்ச்செய்கைகளும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கால்நடைகள் இருபத்தைந்து வரை மழை வெள்ளத்தினால் உயிர் இழந்து உள்ளதாகவும் இது தொடர்பான விபரங்களை கமநல சேவை நிலையங்களில் விவசாயிகள் கமக்கார அமைப்புகளின் மூலம் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பயிர்ச்செய்கைக்கும் கால்நடை உயிர் இழப்புகளுக்கும் இழப்பீடுகளை பெற்றுத் தருவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# கேரள கஞ்சாவுடன் மூவர் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவில் கேரள கஞ்சாவுடன் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர்களை முல்லை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(நி-5-6-299)

# 2,113 குடும்பங்களை சேர்ந்த 6,268 பேர் முல்லையில் பாதிப்பு

## மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2113 குடும்பங்களை சேர்ந்த 6268 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அனர்த்த நிலைமை ஓரளவு குறைந்து வருகின்ற நிலையில் தற்போது 2 இடைத்தங்கல் முகாம்களில் 176 குடும்பங்களை சேர்ந்த 524 பேர் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஊழியர்கள், இராணுவத்தினர், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் மக்களுக்கான சமைத்த உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ([illegible])

# ஐந்து கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிப்பு



(அக்கராயன்)

மழை வெள்ளத்தினால் கிளிநொச்சி மேற்கில் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு பூநகரி பிரதேச சபையின் உழவு இயந்திரங்களின் மூலம் பிரதேச சபையின் பணியாளர்கள் மக்களை ஏற்றி இறக்கி வருகின்றனர்.

பூநகரி கரியாலைநாகபடுவான் குளம், பல்லவராயன் கட்டுக் குளம் என்பன வான் வெள்ளம் பாய்வதன் காரணமாக மன்னார் பூநகரி வீதியினை பல்லவராயன் கட்டுச் சந்தியில் இரு இடங்களில் ஏ-32 வீதியினை மூடி வெள்ளம் பாய்கின்றது.

அதேவேளை வெள்ளம் பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி செல்லும் வீதியினை பல இடங்களில் வீதியினை மூடிப் பாய்வதன் காரணமாக கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, வேரவில், பாலாவி ஆகிய ஐந்து கிராமங்களுக்கு மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் பேருந்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (நி-5-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

359





அவரிடம் போய்ச் சொன்னார்கள். பூதி விக்கிரம கேசரி அப்போது முதன் மந்திரி அநிருத்தப்பிரமராயருடன் பேசிக் கொண்டிருந்தார். அவருடன் இராமேசுவரம் வரையில் போவதற்கு ஆயத்தமாக இருந்தார். ஆகையால் திரும்பி வந்து விசாரிப்பதாகவும் அது வரையில் அந்த வீரனைக் காவலில் வைத்திருக்கும்படியும் சொல்லிவிட்டுப் போனார்.

பிறகு வந்தியத்தேவனை அழைத்துப்போய் ஒரு பாழடைந்த மாளிகையில் ஓர் அறையில் தள்ளிப் பூட்டினார்கள். வாசலில் காவலும் போட்டார்கள். வந்தியத்தேவன் நீண்ட வழிப்பிரயாணத்தினால் களைப்படைந்திருந்தான். ஆகையால், தன்னைச் சிறைப்படுத்தியது குறித்து அவன் மகிழ்ந்தான். இரண்டொரு நாள் அலைச்சல் இன்றி ஓய்வு பெறலாம் அல்லவா?

முதல்நாள் அவனுக்கு அத்தகைய ஓய்வு கிடைத்தது. ஆனால் இரண்டாம் நாள் ஒரு தொல்லை ஏற்பட்டது. அவன் இருந்த அறைக்கு அடுத்த அறையில் ஏதேதோ விசித்திரமான சப்தங்கள் கேட்கத் தொடங்கின. யாரோ ஒருவன் இன்னொருவனை அதட்டி மிரட்டினான். அவனுடைய வீரப்பேச்சுக்கள் பிரமாதமாயிருந்தன. "இந்தா!", "சீச்சீ!", "போ போ!", "கிட்ட வராதே!" "அருகில் வந்தாயோ கொன்று விடுவேன்!", "அடித்து நொறுக்கிவிடுவேன்!" "ஜாக்கிரதை!" "உன் உயிர் உன்னுடையதல்ல!" "யமலோகத்துக்கு அனுப்பி விடுவேன்!", "ஒரே உதையில் உன் உயிர் போய்விடும்!" என்று இப்படியெல்லாம் அடுத்த அறையில் ஒருவன் இரைந்து கொண்டிருந்தான். யாரைப் பார்த்து இப்படி அவன் வீர வாதமிடுகிறான் என்று தெரியவில்லை. ஒரே குரல் தான் கேட்டதே தவிர, அதற்கு எதிர்க்குரல் கேட்கவில்லை. ஒருவேளை யாராவது பைத்தியம் பிடித்த போர் வீரனாயிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அப்படியென்றால், இரவெல்லாம் தூக்கமில்லாமல் செய்து விடுவானே? கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கலாம் என்றால் அதற்கும் இடையூறு நேர்ந்து விட்டதே.

"சொன்னால் கேட்கமாட்டாயா? சும்மா போகமாட்டாயா சரி, சரி! உன்னை என்ன செய்கிறேன், பார்!" இந்த வார்த்தைகளுக்குப் பிறகு தொப்பென்று அவனுடைய அறையில் வந்து ஏதோ விழுந்தது. படுத்திருந்த வந்தியத்தேவன் தூக்கிவாரிப் போட்டு எழுந்தான். விழுந்தது என்னவென்று உற்றுப் பார்த்தான். உடனே அவனையறியாமல் சிரிப்பு வந்தது. கலகலவென்று சிரித்தான் ஏனெனில், அடுத்த அறையிலிருந்து அப்படி வேகமாக வந்து விழுந்தது ஒரு பூனை என்று தெரிந்தது!

"ஓஹோ! உனக்குச் சிரிக்க வேறே தெரியுமா? சிரி! சிரி! மறுபடியும் இங்கே மட்டும் வராதே!" என்று அந்தக் குரல் சொல்லியது.

யாரோ பைத்தியக்காரன் என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் பூனையுடன் இவ்வளவு வாதமிடுவானா? அல்லது பூனை மனிதரைப் போல் சிரிக்கும் என்று தான் எண்ணுவானா? ஆனால் அதிலும் ஓர் அதிசயம் என்னவென்றால் அப்படியெல்லாம் பேசிய குரல் அவனுக்குத் தெரிந்த குரலோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. எங்கேயோ, எப்போதோ கேட்ட குரலாகத் தோன்றியது. ஆனால் யாருடைய குரல்? எங்கே கேட்ட குரல்? நினைத்து நினைத்துப் பார்த்தும் ஞாபகம் வரவில்லை!

எப்படியாவது இருக்கட்டும் யாராவது இருக்கட்டும் என்று எண்ணி வந்தியத்தேவன் படுத்துக் கொண்டான். கண்ணைமூடித் தூங்கப் பார்த்தான். ஆனால் தூங்க முடியவில்லை. சற்று நேரத்தில் அவனுடைய உள்ளங்கால்களில் ஏதோ வழ வழவென்று தட்டுப்பட்டது.

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்



### திருடனைக் கண்டுபிடிப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

"ஏன்? நகரக்காவல் தலைவர் இருக்கிறாரே.. அவரிடம்தான்!" என்றார் அக்பர். திருடனைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை அக்பரிடமிருந்து ஏற்றுக் கொண்ட நகரக்காவல் தலைவர், உடனடியாக பஞ்ரிதாசின் நான்கு பணி யாளர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தார். அவர்களைத் தலைகீழாகத் தொங்கவிட்டு சவுக்கால் அடித்து உடலை நாறாகக் கிழித்து விடுவதாக பயமுறுத்தி, உண்மையைக் கூறச் சொல்லி வற்புறுத்தினார்.

ஆனால் இரண்டு நாள்களாக அவர்களை அடித்து, உதைத்தும் அவர்கள் தாங்கள் நிரபராதி என்றே சாதித்தனர். இரண்டு நாட்களாகியும் தன்னால் உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடித்து, தங்கத்தை மீட்க முடியாமற் போனதை நினைத்து காவல்தலைவருக்கு பயம் உண்டாயிற்று. தன் தோல்வியை ஒப்புக் கொண்டால் சக்கரவர்த்தியின் கடும் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதால் அவர் கலங்கிப் பரிதவித்தார்.



திடீரென பீர்பாலின் ஞாபகம் வந்தது. "அட! இது முன்னமே ஏன் எனக் குத் தோன்றவில்லை? இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியவர் பீர்பால் ஒருவரே!" என்று சொல்லிக் கொண்டே, பொழுது விடிந்ததும் அவசரமாக பீர்பாலைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை பீர பாலுக்கு விளக்கத் தொடங்கியவுடன், "இதைப்பற்றி எனக்கு ஏற்கெனவே தெரியும்" என்றார் பீர்பால்.

"நீங்கள்தான் எப்படியாவது குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும்!" என்று காவல் தலைவர் கெஞ்ச, பீர்பால் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு, காவல் தலைவரை நோக்கி, "எனக்கு மூன்று அடி நீள முள்ள குச்சிகள் நான்கு தேவைப் படுகிறது. அவற்றை நீங் கள் ஏற்பாடு செய்து சிறைச் சாலைக்கு எடுத்துச் செல்லுங்கள். நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் அங்கே வந்து அந்த நால்வரையும் சந்திக்கிறேன்" என்றார்.

பிறகு பீர்பால் சிறைச் சாலையை அடைந்த போது, காவல்தலைவர் குச்சி களைக் கொடுத்து, அந்த நான்கு கைதிகளையும் அழைத்து வந்தார். வாடி, வதங்கிப் போய் அவர்கள் பீர்பால் முன் நின்றனர். அவர்களை நோக்கிய பீர்பால், "உங்கள் எசமானர் பஞ்ரிதாசின் அலமாரியிலிருந்து பத்துத் தங்கக் கட்டிகள் காணமற் போய் விட்டன. உங்களில் ஒருவர் தான் திருடியிருக்க வேண்டும் என அவர் புகார் செய்து இருக்கிறார்" என்றார்.

உடனே, அவர்களில் ஒருவன் "அவர் உப்பைத் தின்று வளர்ந்தவன் நான்! ஒருபோதும் அவருக்கு துரோகம் நினைக்க மாட்டேன்" என்றான். இரண்டாமவன், "நேர்மையை உயிராக மதிப்பவன் நான்! இத்தகைய ஈனச் செயலை கனவில் கூட என் னால் நினைக்க முடியாது" என்றான். "நான் இருபது ஆண்டுகளாக அவரிடம் வேலை செய்கிறேன். பணத்துக்கு ஆசைப்படுபவன் நானில்லை" என்றான் மூன்றாமவன். "நாயை விட நன்றி விசுவா சமானவன் நான்!" என்றான் நான்காமவன்.

"நீங்கள் சொல்வதை நம்புகிறேன். உங்களுக்காக இந்த மந்திரம் ஜெபித்த குச்சிகளைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று ஆளுக் கொன்றாகக் கொடுத்த பீர்பால், "யார் திருடியவனோ, அவன் கையிலுள்ள குச்சி இரவில் அவன் உறங்கும் போது மூன்று அங்குலம் வளர்ந்து விடும். உங்களை நாளை காலை சந்திக்கிறேன்" என்று சொல்லி விட்டு பீர்பால் விடைபெற்றார்.

மறுநாள் பீர்பால் சிறைச் சாலைக்கு வந்ததும், அந்த நால்வரும் தங்களுடைய குச்சிகளுடன் வந்தனர். முதலில் ஒருவனுடைய குச்சியை வாங்கிக் கொண்ட பீர்பால் அதன் நீளத்தை சோதித்தார். பிறகு வரிசையாக அனைவரது குச்சியையும் பரிசோதித்தார். பரிசோதனை முடிந்ததும் மூன்றாவதாகக் குச்சியைத் தந்த ஆளை நோக்கி, "நீதான் தங் கத்தைத் திருடியவன்" என்றார் பீர்பால்.

அவன் உடனே அதை பலமாக மறுத்தான். ஆனால் திருப்பித் திருப்பிக் கேட்டபின் தான் திருடியதாக ஒப்புக் கொண்டான்.

"நீதான் திருடினாய் என்று எனக்குத் தெரிந்து விட்டது. இல்லையேல் உண்மையிலேயே நீ திருடியிருந்ததால், உனக்குக் கொடுத்த மந்திரக்குச்சி மூன்று அங்குலம் அதிகமாக வளர்ந்து விடும் என்று நம்பிக் கொண்டு, நேற்றிரவு சிறையில் மூன்று அங்குல நீளத்துக்கு உன் குச்சியை வெட்டி விட்டாய். ஆனால் குச்சியில மந்திரமும் இல்லை, மாயமும் இல்லை?

இதோ பார்! உன்னுடையது மற்ற குச்சிகளை விடக் குட்டையாக இருக்கிறது" என்று குச்சியைக் காண்பித்தார். காவலர்கள் அவனிடமிருந்து பிறகு தங்கத்தை மீட்டு பஞ்ரிதாசிடம் கொடுத்தனர். திருடியவன் சிறைக்கு அனுப்பப் பட்டான். பிறகு, காவல் தலைவர் தர்பாருக்கு வந்த அக்பரிடம் உண்மையான திருடனைக் கண்டுபிடிப்பதற்கு பீர்பால்தான் அவருக்கு உதவினார் என்பதைக் கூறினார். "அட! பீர்பால்! உனக்கு துப்பறியும் வேலை கூடத் தெரியும் என்று எனக்கு இதுநாள்வரை தெரியாதே!" என்று பாராட்டிய அக்பர், தன் கையிலிருந்த தங்க வளையம் ஒன்றைக் கழற்றி பீர்பாலுக்குப் பரிசாகத் தந்தார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல்கள் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்.

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யுங்கள்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுங்கள் என்ற அவசர கோரிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விடுத்துள்ளார்.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்கள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன.

இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

தவிர, மக்களின் விவசாய முயற்சிகள் அனைத்தும் பெருவெள்ளத்தால் பாதிப்படைந்தமை அந்த மக்களை மிக மோசமான நிலைமைக்குத் தள்ளியுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமைகள் மிகவும் பாதகமாக இருக்கின்ற இந்த நேரத்தில், சாதாரண மக்களின் தொழில் முயற்சிகள் வெள்ளப்பெருக்கில் அடியுண்டு போகும்போது அந்த மக்களால் எதுவும் செய்ய முடியாத கந்தறு நிலை ஏற்படவே செய்யும்.

எனவே இயற்கைப் பேரிடரால் பாதிப்படைந்த மக்களுக்குக் கைகொடுத்து அவர்கள் மீளவும் எழுந்து சொந்தக் காலில் நிற்பதற்கு உதவ வேண்டிய தார்மீகப் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

இங்குதான் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விடுத்த அவசர கோரிக்கையின் பால் அனைவரதும் கவனம் திரும்ப வேண்டியுள்ளது.

ஆம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச நிவாரணம் என்பது எந்த வகையிலும் உதவப்போவதில்லை.

அதிலும் எங்கள் நாட்டில் வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட பாதிப்புக்கான நிவாரணம் என்பது மிக மிகக் குறைவானதாக இருப்பதுடன் வெள்ளப் பாதிப்புக்கான நிவாரணம் வறட்சிக் காலத்திலும் வறட்சியினால் ஏற்பட்ட பாதிப்புக்கான நிவாரணம் வெள்ளப்பெருக்குக் காலத்திலும் வழங்கப்படுகின்ற நடைமுறையும் உண்டு.

ஆனால் உதவி என்பது அவ்வாறு காலம் தாழ்த்தியதன்று. மாறாக பாதிப்புக்கான நிவாரணமும் இழப்பீடும் உடனடியாக வழங்கப்பட வேண்டும். அதுவே அந்த மக்களுக்கு உதவியாக அமையும்.

எனினும் இது விடயத்தில் அரச நிவாரணம் தோல்வி கண்டுள்ளதால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாமாக முன்வந்து உதவுகின்ற திட்டங்கள் அவசியம் தேவைப்படுகின்றன.

எனவே இது விடயத்தில் எங்கள் புலம்பெயர் உறவுகளும் உள்நாட்டில் இருக்கக்கூடிய தனவந்தர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறு வழங்கப்படுகின்ற உதவியானது இரண்டு வகையில் அமைவது கட்டாயமானது.

அதாவது வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு அவர்களின் சீவனோபாயத்துக்கான உதவி என்பது ஒன்று.

மற்றையது அவர்களுக்கு ஏற்பட்ட தொழில் பாதிப்பில் இருந்து அவர்கள் மீண்டெழுவதற்கான உதவி.

மேற்குறித்த இரண்டு உதவிகளையும் செய்யும்போதுதான் இயற்கைப் பேரிடர் ஏற்படுத்திய இழப்புகளில் இருந்து அந்த மக்கள் மீள முடியும்.

ஆகையால் இதுபற்றி அனைவரும் கருணையோடு சிந்திக்க வேண்டும்.

# தீர்வு இல்லாவிட்டால் தொடர் போராட்டம்
# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டால் ஜனவரி 1 ஆம் திகதி முதல் கடுமையான தொழில் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழுவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து தற்போது வரை, நாடு விசேட வைத்தியர்கள் உட்பட 1700 இற்கும் அதிகமான வைத்தியர்களை இழந்துள்ளதுடன், ஐயாயிரத்திற்கும் அதிகமான வைத்தியர்கள் விரைவில் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் உள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## புறாத்தீவு தேசிய பூங்காவிற்கு தற்காலிகமாக பூட்டு

(திருமலை)

வடகிழக்கு பருவப் பெயர்ச்சியுடன் கடலில் சூறாவளி சீசன் வருவதால் திருகோணமலை நிலாவெளி புறாத்தீவு தேசிய பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

படகு மூலம் தீவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி இறுதி வரை கடலின் இந்த கரடுமுரடான தன்மை நீடிக்கும் என்றும் இதற்கிடையில் கடல் சாதாரணமாக இருக்கும் சில நாட்களில் சுற்றுலாப் பயணிகள் தீவுக்குச் செல்ல அனுமதிக்கப்படலாம் என்றும் புறாத் தீவு பூங்கா அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-5-6)

## அடுத்த ஆண்டின் பேசுபொருளாக வற்வரி மகிந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வற்வரி அதிகரிப்பு கொள்கை 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிரதான அரசியல் பேசுபொருளாக அமையும் எனவும் வரி அதிகரிப்பு பாரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரி அதிகரிப்பு தொடர்பான ஊடக அறிக்கையிலேயே முன்னாள் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்எதிர் வரும் தேர்தல் மூலம் நிலையான அரசாங்கத்தை அமைப்பதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதன்மையான கடமை எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக இடைத்தரகர்களிடம் ஏமாற வேண்டாம் அமைச்சர் மனுஷ எச்சரிக்கை

(கொழும்பு)

இஸ்ரேலிய வேலை வாய்ப்புகள் அரசாங்கத்திடம் இருந்து மட்டுமே கிடைப்பதால் இடைத் தரகர்களிடம் பணம் செலுத்த வேண்டாம் என அமைச்சர் மனுஷ நாணயக்கார எச்சரித்துள்ளார்.

அத்துடன் மோசடியான முறையில் பணம் பெறுபவர்கள் குறித்து தகவல் தெரிந்தால் அறிவிக்கு மாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இஸ்ரேலிய வேலை வாய்ப்புகள் குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சரின் செயலாளர்கள் போல் பாவனை செய்து இஸ்ரேலில் தொழில் வழங்குவதாக பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மோசடியான முறையில் பணம் பெற்று வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இஸ்ரேலிய விவசாய வேலை வாய்ப்புகள் அரசாங்கத்திடம் இருந்து மட்டுமே கிடைப்பதால், அந்த வேலைகளுக்காக இடைத்தரகர்களிடம் பணம் செலுத்துவதைத் தவிர்க்குமாறும், அவ்வாறு பணம் பெறு பவர்கள் பற்றிய தகவல் தெரிந்தால், அது குறித்து தெரிவிக்கு மாறும் அமைச்சர் மனுஷ நாணயக்கார கேட்டுக் கொண்டுள்ளார். இந்நிலையில், இஸ்ரேலில் விவசாயத் துறையில் தொழில் வாய்ப்புகளைப் பெற்ற இலங்கையர்களில் முதல் குழுவாக 80 இளைஞர்கள் இன்று இஸ்ரேலுக்குப் புறப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# கடத்தல்காரரின் சொத்துகளை பறிமுதல் செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மறைந்துள்ள அனைத்து பாதாள உலகக் குழு மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படவுள்ளன.

துபாய், இத்தாலி, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் தலைமறைவாகியுள்ள குற்றவாளிகளின் பல பில்லியன் ரூபாய் பெறுமதியான வாகனங்கள் உட்பட அனைத்து சொத்துக்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றினை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மறைந்திருக்கும் 3320 பாதாள உலக குழுவினர் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடத்தல் மூலம் பெறப்பட்ட வீடுகள், வாகனங்கள், தங்க ஆபரணங்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட குற்றவாளிகளின் அனைத்து சொத்துக்களையும் பறிமுதல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கைது செய்தலின் பின்னரான நடவடிக்கை முறை புலனாய்வொன்றை நடத்தும்போது ஆட்களை விசாரணை செய்தல், நிபுணர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல் , கைவிரலடையாளங்கள், நிழற்படங்கள்,உள்ளார்ந்தவையல்லாத மாதிரிகள், இரத்த மாதிரிகள், மற்றும் குரல் மாதிரிகள் முதலியவற்றை எடுத்தல், நீதிவான்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்.

எழுத்திலான கட்டளைமூலம், 42 ஆம் பிரிவின்கீழ் எந்த ஆள் தொடர்பில் விசாரணையொன்று அல்லது புலனாய்வொன்று நடத்தப்படுகின்றதோ அந்த எவரேனுமாளை, அவரது வாழ்க்கைத்துணையை, அத்தகைய ஆளின் வேறு குடும்ப உறுப்பினரை அல்லது முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளுக்காக நம்பிக்கைப்பொறுப்பில் ஏதேனும் ஆதனத்தை வைத்திருக்கின்ற வேறு எவரேனுமாளை அல்லது அவரது ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற ஏதேனும் வங்கியை அல்லது ஏதேனும் வங்கித்தொழில்சாராத நிதி நிறுவனத்தை அல்லது பெயர் குறிக்கப்பட்ட நிதி சாராத் தொழிலை அல்லது, அவர் ஒரு பணிப்பாளராகவிருக்கின்ற கம்பெனியொன்றை அல்லது அவர் பங்காளராகவிருக்கின்ற குழுமமொன்றை, ஆணைக் குழுவினால் அத்தகைய கட்டளை இல்லாதொழிக்கப்படும் அத்தகைய காலம்வரை, அத்தகைய ஆதனத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கைதுறப்பதிலிருந்து, கையாள்வதிலிருந்து அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதிலிருந்து, அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் சொத்துவத்தை அல்லது அதிலான ஏதேனும் அக்கறையைக் கைமாற்றுவதிலிருந்து தடுத்தல், இலங்கைக்கு வெளியேயுள்ள ஆதனத்தைக் கையாள்வதைத் தடை செய்தல்,

விசேட புலனாய்வு நுட்பங்களைக் கண்டறிதல், தகவல்களைப் பாதுகாத்தலும் பேணிக் காத்தலும், சேவை வழங்குநர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல், தொடர்பாடல்களை இடைமறித்தல்,

தரவுகளையும் தகவல்களையும் தடையகற்றித் திறத்தல், புலனாய்வுகளுக்கு உதவுதல், கூட்டுப் புலனாய்வுகள், தகவல்களை வெளிப்படுத்துதலும் பகிர்ந்து கொள்ளுதலும், சர்வதேச ஒத்துழைப்பு, ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அழைப்பாணை,

இச்சட்டத்தின்கீழ் ஆணைக் குழுவினால் நடத்தப்பட்ட புலனாய்வொன்றின்போது அதனால் பெறப்பட்ட விடயப்பொருளானது எவரேனுமாளினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்று புரியப்பட்டதனை வெளிப்படுத்துகின்றவிடத்து, ஆணைக்குழு, தோதான நீதிமன்றத்தில் அத்தகைய ஆளுக்கெதிராக குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்குமாறு பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணித்தல்.

சாட்சிகள் பற்றிய நிரலில் குறித்துரைக்கப்படாத எவரேனும் சாட்சியை அழைத்தல் அல்லது ஆவணங்கள் பற்றிய நிரலில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் ஆவணத்தை பயன்படுத்துதல் அல்லது காண்பித்தல் குற்றப்பகர்வை மீளப்பெறுதல், மேன்முறையீடுகள் சட்டத்துறைத் தலைமையதிபதியின் உதவியைக் கோருதல்,

குற்றத் துணையாளிகளுக்கு எதிராக குற்றஞ்சாட்டாது இருத்தல் அல்லது குற்றவழக்கு தொடுக்காது இருத்தல், குற்றவழக்குத் .தொடுப்பு உடன்படிக்கைகளை பிற்போடுதல் போன்றவை உள்ளடங்கியுள்ளன.

மேலும் ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கென இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவுள்ள வேறேதேனும் தோதான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் நிறைவேற்றலாம்.

**தகவலளிப்போரினதும், இடித்துரைப்போரினதும், சாட்சிகளினதும் மற்றும் ஆணைக் குழுவுக்கு உதவுகின்ற வேறு ஆட்களினதும் பாதுகாப்பு**

இச் சட்டத்தின் பாகம் I அத்தியாயம் V இல் தகவலளிப்போரினதும், இடித்துரைப்போரினதும், சாட்சிகளினதும் மற்றும் ஆணைக் குழுவுக்கு உதவுகின்ற வேறு ஆட்களினதும் பாதுகாப்பு பற்றி விபரிக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளதென்று அல்லது புரியப்பட்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்டதென்று அல்லது புரியப்படுவதற்கான சாத்தியமுள்ளதென்று பொருள்படும் தகவலை அந்தரங்கமான முறையில் பெறுகின்றவிடத்து, அத்தகைய தகவலும் தகவலளித்தவரின் ஆளடையாளமும் வெளிப்படுத்தப்படுதலாகாது என்பதுடன், தகவலளித்தவரும் மற்றும் அத்தகைய தகவலுடன் தொடர்புடைய கருமங்களும் ஏதேனும் நீதிமன்றத்தின், நியாயசபையின் அல்லது வேறு அதிகாரசபையின் முன்னரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் வெளிக்காட்டப்படுதலுமாகாது.

தகவலளிப்பவரொருவர், அத்தகைய தகவலை அளிப்பதற்காக பாதகமான தொழில் நிலைமைகளுக்கு, பழிவாங்குதலுக்கு, பலவந்தப்படுத்துதலுக்கு, மிரட்டுதலுக்கு, எதிர்தாக்குதலுக்கு, தொல்லைக்கு, ஏதேனும் உடல்சார் ஊறுபாட்டுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு அல்லது மேற்போந்த எதற்கும் அமைந்தவராதலாகாது. இடித்துரைப்பவர் ஒருவரினால் 74 ஆம் பிரிவின்கீழ் தகவலொன்று வழங்கப்படுகின்றவிடத்து, அத்தகைய தகவலை வழங்குவதற்காக அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கையெதுவும் எடுக்கப்படுதலாகாது.

இப்பிரிவின் (கடைசிப் பந்தி) ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிப்படுவதன்மேல், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற் தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆணைக்குழுவுக்கு உதவும் ஆளொருவரின்காப்பு பாதகமான முறையில் பாதிக்கப்படுகின்றதென்று அல்லது அத்தகைய ஆள் அல்லது வேறு எவரேனும் ஆள் மிரட்டுதலுக்கு, தொல்லைக்கு, ஊறுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு அமைந்தவராகலாமென்று ஆணைக் குழுவுக்குத் தோன்றினால், ஆணைக் குழுவானது அத்தகைய ஆளுக்கு உடல்ரீதியானகாப்பை வழங்குவதற்கு அல்லது மிரட்டுதல், தொல்லை, ஊறு அல்லது அச்சுறுத்தல் என்பவற்றிலிருந்து அத்தகைய ஆளை அல்லது வேறு எவரேனுமாளைப் பாதுகாப்பதற்கு, அவசியமானவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம். இவைபற்றி விரிவாக இவ் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆளொருவர், ஆணைக்குழுவுக்கு அல்லது அதன்முன்னர் அளித்த ஏதேனும் கூற்று, வழங்கிய தகவல் அல்லது பதில் அல்லது காண்பித்த ஏதேனும் ஆவணம் அல்லது வேறேதேனும் வஸ்து தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்குக்கு, குற்றவழக்குக்கு அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைக்கு ஆளாதலாகாது. இவ்வாறு சாட்சிகளுக்கான விடுபாட்டுரிமை பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

சாட்சிகளுக்கும் மற்றும் ஆணைக் குழுவுக்கும் உதவுகின்ற ஆட்களுக்குமான பாதுகாப்பும் மற்றும் அவசியமானவிடத்து சட்ட பிரதிநிதித்துவம் வழங்குதல் பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

மேலும் இச்சட்டத்தில் உள்ளடங்கியுள்ள எதுவும், 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உறுதிப்படுத்தப்பட்ட பலிக்குட்படுத்தப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளுக்குப் பங்கம் விளைவித்தலாகாது.

**சொத்துக்களையும் பொறுப்புக் களையும் வெளிப்படுத்துதல்**

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் இரண்டாம் பாகம் அலுவலர்களின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் சம்பந்தமானது. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கமைய, இப்பாகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவற்றுக்கானவையாதல் வேண்டும்.

இலங்கைக்குள்ளேயும் அதற்கு வெளியேயும் எல்லா பகிரங்க உத்தியோகத்தர்களுக்குமுள்ள அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் காலாகால வெளிப்படுத்துகைகளைச் செய்யும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துதல்.

அத்தகைய வெளிப்படுத்துகைகளைச் சமர்ப்பிப்பதற்காக, மத்திமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையொன்றை ஏற்பாடு செய்தல் இப்பாகம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்தவோர் ஆளுக்கெதிரான ஏதேனும் தகவல் பெறப்பட்டதன்மேல், தோதான அதிகாரிகளினால் அத்தகைய வெளிப்படுத்துகைகளுக்குச் செய்யப்பட வேண்டிய குறிப்பீட்டுக்காகவும் மற்றும் புலனாய்வுகள் நடாத்தப்படுவதற்காகவும் ஏற்பாடு செய்தல்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்குழியில்...

கிலோ கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞன் ஒருவரே நாவற்குழி பகுதியில் கஞ்சாவுடன் கைதாகியுள்ளார்.

கைதான இளைஞனை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## சுமார் 5 ஆயிரம்...

வெள்ளப்பெருக்கு காரணமாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 241 குடும்பங்களைச் சேர்ந்த 760 பேரும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேரும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 259 பேரும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 212 குடும்பங்களைச் சேர்ந்த 712 பேரும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 654 குடும்பங்களைச் சேர்ந்த 2264 பேரும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 117 குடும்பங்களைச் சேர்ந்த 439 பேரும் கர வெட்டி பிரதேச செயலர் பிரிவில் 42 குடும்பங்களைச் சேர்ந்த 144 பேரும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேரும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேரும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 44 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த 24 மணித்தியாலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதி கூடிய மழை வீழ்ச்சியாக 73.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி அச்சுவேலி பகுதியில் பதிவாகியது என்றார். (ம-7,33)

## நாட்டின்...

நிலையான அரசாங்கத்தை உறுதிப்படுத்துவது பொதுஜன பெரமுனவின் முதன்மையான கடமையாகும்.

ஒவ்வொரு பொதுமக்களும் தாம் வாக்களிக்கும் அரசியல் கட்சியின் வரிக் கொள்கை மற்றும் கடந்த கால பொருளாதார நடைமுறைகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். அதன் பிரகாரம் மக்கள் தமது முடிவுகளை எடுக்க வேண்டும்.

தேர்தல்கள் நெருங்க நெருங்க, மக்களைக் கண்மூடித்தனமாகவும், சிந்திக்க விடாமலும் பல்வேறு திசைகளில் பிரசாரங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

சமூக ஊடகங்கள் மூலம் மக்களை குழப்பத்துக்கு உள்ளாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை காண்கிறோம்" என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7)

## சொத்துக்களை...

வடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

பரேட் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள காணொளியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனாத் தொற்று மற்றும் வங்குரோத்து நிலைமை ஆகிய பேரழிவுகளை எதிர்கொண்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினரின் சொத்துக்கள் வர்த்தக முயற்சியாண்மைகள் மற்றும் வளங்கள் நீதிமன்றத் தலையீடு இன்றி பரேட் சட்டத்தின் (Parate execution) மூலம் உடனடியாக ஏலத்திற்கு விடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

இதனால் தொழிலதிபர்கள் அழுத்தத்திற்கும் நிர்க்கதி நிலைக்கும் ஆளாகியுள்ளனர். தொழில் துறையானது பொருளாதார மற்றும் சமூக ரீதியாக மிகவும் வீழ்ச்சி நிலையை எட்டியுள்ளது. இதனால் சொத்துக்களின் ஏலங்கள் அதிகரித்துள்ளன.

இவ்விவகாரத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும். வங்கிகளின் ஸ்திரத்தன்மைக்குத் தாக்கமில்லாத வகையில் இதில் தலையிட்டு அதைப் பேண பிரத்தியேக நிதியத்தை உருவாக்க வேண்டும். பரேட் சட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது தொடர்பாக அரசாங்கம் உடனடி கரிசனை காட்ட வேண்டும்.

அரசாங்கத்திற்கு சார்பானவர்கள் ... வங்கிகளில் கோடிக்கணக்கில் கடன் பெற்று, கடனை செலுத்தாமல், கடன் ஒப்பந்தங்களில் தங்களுக்குச் சாதகமாக திருத்தங்களைச் செய்துள்ளனர்.

இவ்வாறு பாரிய கடன் பெற்றவர்களுக்கு ஒரு கவனிப்பும் நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு தனியான கவனிப்பும் வழங்கப்படுவது தொடர்பாக அரசாங்கம் தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்ய வேண்டும், எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## போதை மாத்திரை...

15 பேர் கஞ்சா, ஹெரோயின், போதை மாத்திரை என்பவற்றுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 15 பேரையும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த 15 பேரில் ஆறு பேர் யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## இலங்...

பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் வறிய மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்கள் மீதான தாக்கங்களைத் தணிப்பதற்கும் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இந்த நிதி உதவியின் கீழ் கடந்த ஜூன் மாதம் முதல் தவணையாக 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி விடுவித்திருந்தது. (ம-7)

## தேர்...

ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு கூறினார்.

பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு 50,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்து நுகர்வோருக்கு குறைந்த விலையில் அரிசியை வழங்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக பாரளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இப்பெரும் போகத்தில் இரண்டு மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி பெறப்படவுள்ளது. நாட்டின் அரிசித் தேவையில் 80 வீதம் இந்த பருவத்தில் இருந்து பெறப்பட உள்ளது.

இவ்வாறான நிலையில் அரிசியை இறக்குமதி செய்தால் ஒரு கிலோ அரிசியின் விலை 100 ரூபாவாக குறையும். இதனால் உள்நாட்டு விவசாயிகள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்றார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2023.12.20
சீட்டிழுப்பு இலக்கம் 0160
D 4 3 6 2 0 8 D

தன நிதானய
திகதி - 2023.12.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1364
L 08 45 63 69 L
49971

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3576
சீட்டிழுப்பு திகதி 20.12.2023
D 43 51 73 75
D
23617

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.20
சீட்டிழுப்பு இலக்கம் 0643
இடபம் 04 37 38 42 இடபம்
37802 29

மஹஜன சம்பத
திகதி 2023/12/20
சீட்டிழுப்பு இலக்கம் 5334
W 4 0 8 8 2 7

மெகா பவர்
திகதி 20/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1682
R 12 33 34 71 77
62906

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4020
வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.12.20
தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 08 14 52
மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,644,954.80
866221

சனிதா
திகதி 2023.12.20 வெற்றி வாரம் 4469
02 35 36 74 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,446,348.00
26085

ஜயோதா Jayoda
திகதி 2023.12.20 வெற்றி வாரம் 1984 வர்ணம் மஞ்சள்
05 06 23 48 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,067,292.00
01253

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.12.2023 வெற்றி வாரம் 042
H 9 7 2 8 7 1
52159
24,384,219.20
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2308 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.20 தினம் புதன்கிழமை
22 32 43 44 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 62,483,276/-
37649

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 03 09 37 45 74
1484
2023.12.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 480,005,294.20

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2134
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 77,513,746.40/-
29 34 37 42 I
209617


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்


வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18242)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


எமது இதயங்களின்

## கண்ணீர் அஞ்சலி



யாழ். ஊரெழு J/267 பிரிவில் கிராம சேவை உத்தியோகத்தராக இருந்து மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றிக் கொண்டிருக்கும் திரு. **ம.ஞானேந்திரன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

ஆயிரம் பிறை கண்ட

**அமரர் கந்தையா மகாதேவா பத்தர்**

மண்ணில் மகவாக : 23.09.1937
விண்ணில் தெய்வமாக : 18.12.2023

அவர்களின் இழப்பிற்கு எமது ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினராகிய நாம் எமது இதயத்தின் துயரம் தோய்ந்த கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வீரகத்தி விநாயகரை வேண்டுவதோடு அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(18293) *ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நிர்வாக சபை - ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயம்.

## ஆலய கட்டிட வேலைகள் தொடர்பான விலை மனுக் கோரல்

குடமியன், வரணி, ஆதிசிவன் ஆலய கட்டிட வேலைகளான பிள்ளையார், மூலஸ்தானம் 2ம், 3ம், 4ம், 5ம் மண்டபம் மற்றும் சுற்றுக் கொட்டகை, மடப்பள்ளி போன்ற வேலைப்பாடுகள் உள்ளன. இவற்றுக்கான சிற்ப வேலைப்பாடுகளும் இந்திய சிற்பாசாரிகளுடன் கூடியவர்கள் விரும்பத்தக்கது. இவற்றுக்கான இறுதித்திகதி 28.12.2023 வரை ஆலய நிர்வாக சபையுடன் தொடர்புகொண்டு நேரில் வந்து பார்வையிட்டு தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு –

செயலாளர் : 077 161 4235
பொருளாளர் : 077 619 3586

(C-7954)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.



- செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- அனைத்து விதமான 22 கரட் தங்க ஆபரணங்களுக்கும் யாழில் எங்கும் இல்லாத விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

**Box Chain : 167,750/=**

- அனைத்து ஆபரணங்களும் 22 கரட் என உறுதிப்படுத்தி தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.
- இச்சலுகை இம்மாதம் 30ஆம் திகதி வரை மட்டுமே

(18300)

077 165 1729 | 077 773 0567
021 222 8334


# போதைப் பொருளுடன் துன்னாலையில் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி துன்னாலை மேற்கு பகுதியில் பெண்ணொருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

37 வயதான குறித்த பெண் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 720 மில்லிகிராம் அளவுள்ள ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதுடன் 23,000 ரூபாய் பணமும்சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப் பட்டது.

குறித்த பணம் போதைப் பொருள் விற்பனை மூலம் கிடைத்திருக் கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

சந்தேகநபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## தழிழ்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

குறித்த சந்திப்பு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதியுடனான சந்திப்பில்கலந்து கொள்ளுமாறு வடக்கு கிழக்கு தமிழ்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதியின் மேலதிக செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் தான் பங்கேற்கப் போவதில்லை என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக்கு இன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில்அதற்கு பதிலளித்து அவர் அனுப்பிய கடிதத்தில் இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்ற மிக முக்கியமான விடயம் தொடர்பில் ஜனாதிபதியால் ஏற்கனவே, வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அமுல்படுத்தாமல் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடுவதன் மூலம் எந்தவொரு பயனுள்ள நோக்கமும் நிறைவேறாது என்பதே எனது கருத்தாகும்.

ஆகவே, இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளப்போவதில்லை என்பதையிட்டு வருந்துகிறேன்.

எனது முடிவை ஜனாதிபதிக்கு தெரிவிக்கவும்" என்று குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,33)


## காணி விற்பனை

புலோலி கொடிகாமம் வீதியில்
1ம் Km பக்கத்தில்
வீதி அருகாமையில்
4 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு. (18288)

077 533 3890

## வேலையாட்கள் தேவை

ஈர அரிசி அரைத்து,
மா வறுத்தல் ஆண், பெண்
இருபாலாரும் தேவை.
சம்பளம் - 2,500/= இற்கு மேல் (18302)

077 936 1356

## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance
Grammar Classes
இல. 53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18299)

## கடை வாடகைக்கு

ஊரெழு பிள்ளையார்
கோவில் அருகாமை
பலாலி வீதியில் உள்ள கடை
வாடகைக்கு விடப்படும். (18296)

076 803 2690
074 367 6287

## தேவை

வட்டா ரக வாகனம் (வடி)
விற்பனைக்கு இருந்தால்
கீழ்க் காணும் தொலைபேசி
இலக்கத்திற்கு தொடர்பு
கொள்ளவும். (C-7959)

076 526 6717

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7961)

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## CANADA

VISITOR VISA
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7961)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் நந்தாவில்
அம்மன் கோவிலுக்கு
அருகில் 3 3/4 பரப்புக்
காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : (18301)

077 882 8638


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org